செ.வெ.எண் : 27/ ஜூலை நாள் : 13.07.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## இராணுவத்திற்கான ஆள்சேர்ப்பு திரளணி தஞ்சாவூர், அன்னை சத்தியா மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் 02.08.2017 முதல் 10.08.2017 வரை நடைபெறவுள்ளது.

**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

இந்திய இராணுவ படைக்கு சோல்ஜர் டெக்னிக்கல், சோல்ஜர் டெக்னிக்கல் (AMN/AVN), சோல்ஜர் நர்சிங் அசிஸ்டெண்ட், சோல்ஜர் பொதுப்பணி (GD), சோல்ஜர் கிளார்க் / ஸ்டோர்கீப்பர் டெக்னிக்கல் மற்றும் சோல்ஜர் டிரேட்மேன் பதவிக்கு 02.08.2017 முதல் 10.08.2017 வரை அன்னை சத்தியா மாவட்ட விளையாட்டு அரங்கம், தஞ்சாவூரில் இராணுவ ஆட்சேர்ப்பு திரளணி நடைபெறவுள்ளது. தகுதியும், விருப்பமும் உள்ளவர்கள் கலந்து கொண்டு பயன் பெறலாம்.

மேலும் விபரம் அறிய முன்னாள் படைவீரர் நல துணை இயக்குநர், இராமநாதபுரம் அவர்களை அலுவலக நாட்களில் நேரிலோ அல்லது தொலைபேசி வாயிலாகவோ (04567-230045) தொடர்பு கொள்ளவும். www.joinindianarmy.nic.in என்ற இணையதளம் வாயிலாக 17.07.2017-க்குள் விண்ணப்பிக்கவும்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**